අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

## உயர் தர தொழிற்பாடத்துறை
## தரம் 12 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பம் கோரல் – 2025 (இரண்டாம் கட்டம்)

2024 (2025) க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதும், 2025/2026 கல்வி ஆண்டில் இரண்டாவது கட்டமாக உயர் தர தொழிற் பாடத்துறையின் தரம் 12 இற்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்காக விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன. இப் பாடத்துறைக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது **க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது**.

தொழிற் பாடத்துறையின் கீழ், **தரம் 12 இல் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளை** நிறைவு செய்து, **தரம் 13 இல்** கீழே தரப்பட்டுள்ள தொழிற் பாடங்களின் ஒன்றில் தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 இற்குரிய **தொழிற் பயிற்சிப் பாடநெறி ஒன்றிற்கு** மாணர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு **NVQ4 சான்றிதழினைப்** பெற்றுக் கொள்ள முடியும்.

1. குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு
2. சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு
3. உடற் கல்வி மற்றும் விளையாட்டு
4. அரங்கற் கலை
5. நிகழ்ச்சி முகாமை
6. கலை மற்றும் கைவினை
7. உள்ளக வடிவமைப்பு
8. நவநாகரீக வடிவமைப்பு
9. கிராஃபிக் வடிவமைப்பு
10. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல்
11. நிலத்தோற்ற வடிவமைப்பு
12. பிரயோக தோட்டக் கலைத் தொழில்நுட்பக் கல்வி
13. கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி
14. உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி
15. நீர்வளத் தொழில்நுட்பக் கல்வி
16. பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி
17. கட்டுமானத் தொழில்நுட்பக் கல்வி
18. மோட்டார் இயந்திர தொழில்நுட்பக் கல்வி
19. மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி
20. ஜவுளி மற்றம் ஆடைத் தொழில் நுட்பக் கல்வி
21. உலோகக் கட்டுமான தொழில்நுட்பக் கல்வி
22. அலுமினிய கட்டுமான தொழில்நுட்பக் கல்வி
23. கலை மற்றும் வடிவமைப்பு
24. சுற்றாடல் கல்வி
25. கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு
26. உற்பத்தி
27. விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்
28. வழங்கல்கள் முகாமைத்துவம்

tamilguru.lk

அதற்கமைய, உயர் தர தொழிற் பாடத்துறையில் கற்க எதிர்பார்க்கும் மாணவர்கள், இத்துடன் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட **விண்ணப்பப் படிவமொன்றை 2025.08.14ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும் பாடசாலையின் அதிபருக்கு** அனுப்பிவைத்தல் வேண்டும். (பாடத்துறை நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளின் பட்டியலை இங்கு பெற்றுக் கொள்ளலாம்)

மேலதிக தகவல்களுக்கு வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப 4.00 வரையில் 0112 787136/ 0112 786746 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்புகொள்ள முடியும்.

**பீ.டீ.எஸ் பாலசூரிய**
**கல்விப் பணிப்பாளர் (அனைவருக்கும் கல்விக் கிளை)**